DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 21/2026** |
| Deposition of Witness for | : | **P.W. 5** |
| Name | : | **போஸ்** |
| Father's Name | : | **வீரணன்** |
| Village | : | **அல்லூர்** |
| Taluk | : | |
| Calling | : | **கூலி** |
| Age | : | **55/2026** |

**(வழக்கின் எதிரிகள் 1, 2, 3, 4, 6 ஆஜர். 5-ம் எதிரி ஆஜர் இல்லை. 5-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11.06.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது அல்லூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன், ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள் ஆவார்கள். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது, சம்பவ சமயத்தில் நான் வேலைக்கு சென்றுவிட்டேன், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

WEB COPY

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது எங்கள் ஊரைச் சேர்ந்த அருண்பாண்டி, முத்துக்கிருஷ்ணன், சக்திவேல், சிவக்குமார், உலகநாதன் ஆகியோர் முத்தரையர் சங்கம் வைத்து போர்டு ஊண்டினார்கள் என்றும் அதில் நாங்கள் சேரவில்லை என்பதால் பிரச்சினை உருவானது என்றும் எங்கள் மீது கோபப்பட்டு முத்துக்கிருஷ்ணன் கூட்டாளிகளுடன் நாடக மேடையில்வைத்து அசிங்கமாக பேசினார் என்றும் அப்போது அந்த வழியாக வந்த நான் ஏன் இப்படி பேசிகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் என்னை பார்த்து அன்று இரவே உனது வைக்கோலுக்கு தீ வைத்து கொளுத்திவிடுவேன் என்று மிரட்டல் விடுத்தார்கள் என்றும் 27.07.2017ம் தேதி காலை 4.00 மணியளவில் எதிரிகள் 6 பேரும் எங்கள் சமையல் கூடாரத்தில் தீ பிடிக்க வைத்தார்கள் என்றும் எதிரிகள் மீது சிவகங்கை தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

/Sd./ S. Mohana Ramya,
உதவி அமர்வு நீதிபதி,
தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
சிவகங்கை.

WEB COPY